உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 19 சனிக்கிழமை (02.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 186

# கொழும்பில் அலையும் வடக்கு - கிழக்குத் தமிழரை

# அவரவர் வீட்டுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை!

## அவர்களால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிறார் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு,ஜூன் 02

நாட்டின் குழப்பமான பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்து, தங்கி நின்று, நீண்ட காலம் இங்கு அலையும் சிறுபான்மையினத்தவரான தமிழர்களினால் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆகவே அவர்கள், அவரவர் வீடுகளுக்கு உடன் திருப்பி அனுப்பிவைக்கப்படுவர்.

அதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை நாமே செய்து கொடுப்போம். நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

- இப்படி அறிவித்திருக்கின்றார் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா.

போர் வெடித்துள்ள வடக்கு, கிழக்கிலிருந்து வரும் தமிழர்கள் வேலை ஏதுமின்றி தலைநகர் கொழும்புப் பிரதேசத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக அலைகின்றார்கள் என்றும் -

இவர்களால்தான் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் - தெரிவித்திருக்கின்றார் பொலிஸ்மா அதிபர். ஆகவே இத்தகையோர் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

குழப்பமான வடக்கு, கிழக்குப் பிரதேசத்திலிருந்து பெரும் எண்ணிக்கையானோர் தலைநகரில் வந்து தங்கியிருக்கின்றமை ஏனையோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என்றும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டிருக்கின்றார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த உடன்படிக்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

### - கண்காணிப்புக் குழு

கொழும்பு, ஜூன் 02

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக எந்த விதமான மாற்றமும் தம்மைப் பொறுத்த மட்டில் இல்லை என்று இலங்கைப் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 2

பால்மாவின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று வர்த்தக சந்தைப்படுத்தல் விருத்திக்கு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதன்படி 400 கிராம் பால்மா பக்கற் ஒன்று 180 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் பால் மா பக்கட் 425 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## எரிபொருள் விலை அடுத்த வாரம் உயரும்

எரிபொருள்களின் விலைகளை அடுத்த வாரம் மேலும் அதிகரிக்கப் போவதாக பெற்றோலிய, எரிபொருள் வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

நாட்டில் செலவீனங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்நிலையில் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்காவிட்டால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெருமளவிலான நஷ்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று தெரிவித்தார். (சி)

## காணாமற்போன உறவுகளை மீட்டுத்தருமாறு ஜனாதிபதியிடம் கண்ணீர் மல்கக் கோரிக்கை!

### நேற்று அலரிமாளிகையில் உறவினர்கள் மன்றாட்டம்

காணாமற் போனவர்களை உடனடியாக மீட்டுத் தருமாறு, காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று அழுது புலம்பிக் கெஞ்சிக் கேட்டுள்ளனர்.

அவர்களை மீட்டெடுப்பதற்கான நட வடிக்கையை தாம் தீவிரப்படுத்துவார் என்றும் - அடுத்தவாரமளவில் 5 பேர் அடங்கிய விசேட குழுவொன்றை அமைத்து அக்குழுவின் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் -

கொழும்பில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் இக்குழுவின் ஊடாகத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் - அந்த உறவினர்களிடம் ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார்.

விடுதிகளில் தங்கியுள்ள தமிழர்களும் கொழும்பு வாழ் தமிழர்களும் பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கினால் உடனடியாக இக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோரின் ஏற்பாட்டில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் நேற்றுமாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து காணாமல்போன தமது உறவினர்களை மீட்டுத்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

**கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்**

இவர்கள் அனைவரும் ஜனாதிபதி முன்னிலையில் கண்ணீர் பெருக அழுது, தமது உறவினர்களை மீட்டுத்தருமாறு மன்றாடியிருக்கின்றனர்.

ஒவ்வொருவரினதும் பிரச்சினைகளை

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடுதிகளில் தங்கியுள்ளோர் முறைப்பாடு செய்வதற்கு வசதி

கொழும்பில், 2

கொழும்பில் உள்ள 'லொட்ஜ்'களில் (விடுதிகளில்) தங்கியுள்ள தமிழர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அது குறித்து உடனடியாக ஐக்கிய தேசிய கட்சிக்கு அறிவிக்குமாறு அக்கட்சி தெரிவித்துள்ளது.

செய்யப்படும் முறைப்பாடுகளுக்கமைவாக 'லொட்ஜ்'களில் தங்கியுள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அக்கட்சி மேற்கொள்ளும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை ஊடான போக்குவரத்து; செஞ்சிலுவை - புலிகள் நேற்றுப் பேச்சு

கிளிநொச்சி, ஜூன் 2

ஏ- 9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்தை மேம்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று ஓமந்தையில் இடம்பெற்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பிரதிநிதிகளுடன் நடந்த இப்பேச்சில் விடுதலைப் புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன், அரசசார்பற்ற அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்பாளர் பாவரசன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் பங்கு பற்றினர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நடத்திக் கொண்டே பேசலாம் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 2

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரச படைகள் ஒருபுறம் யுத்தம் நடத்திக்கொண்டிருக்கையிலே மறுபுறத்தில் அமைதித் தீர்வு குறித்து புலிகளுடன் பேசுவதற்குத் தாம் தயார் என்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

புலிகள் இணங்குவார்களானால் ஒக்டோபர் 2006இல் பேச்சுகள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து அதனைத் தொடரலாம் என்றும் அதற்கு ஜனாதிபதி தயார் என்றும் அவரின் பேச்சாளர் சந்திரபால லியனகே நேற்றுத் தெரிவித்தார்.

''இன்று - இப்போதுள்ள நிலைமையில்கூட நான் பேசத்தயார். நான் முழுமையான ஜனநாயகவாதி. அமைதித் தீர்வில் நம்பிக்கை கொண்டவன்'' - என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி.

''யுத்த நிறுத்த ஒப்பந்தம் சுமார் 8 ஆயிரம் முதல் 9 ஆயிரம் தட வை க மீறப்பட்டுவிட்டன. ஆனால் நாங்கள் இன்னும் யுத்த நிறுத்தத்தைக் கைவிடவில்லை. ''

(08ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் தமிழர்கள் வாழ்வு குறித்து சீனப் பிரதிநிதிகள் குழு பிரதமரிடம் கேள்வி

### இடையூறுகள் இல்லை என்கின்றார் அவர்

கொழும்பு, ஜூன் 2

தென்பகுதியில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலை இல்லை என்பது பொய்யானகருத்து. நீங்கள் நம்ப வேண்டாம் -

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சீனப்பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

பிரதமரை நேற்று அவரது அலுவலகத்தில் சீனப்பிரதிநிதிகள் குழு ஒன்று சந்தித்த வேளை சீனப்பிரதிநிதிகள் பிரதமரிடம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து ஆயுதங்கள்; இரகசியப் பயணம் அம்பலம்!

கொழும்பு, ஜூன் 2

இந்தியாவுக்குச் சென்ற அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு இணங்க சில இராணுவத் தளபாடங்கள் அடங்கிய பொருள்களை ஏற்றிய இந்திய விமானம் ஒன்று கொழும்புக்கு இரகசியப் பயணம் ஒன்றைமேற்கொண்டு அப்பொருள்களை இறக்கிவிட்டுச் சென்றிருக்கின்றது எனப் புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு நாள் உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயாலாளர் கோத்தபய ராஜபக்ஷ அங்கு இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்திய கடற்படைத்தளபதி அட்

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரப்பாபிள்ளை ஆழ்வாப்பிள்ளை

பருத்தித்துறை, ஐயனார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரப்பாபிள்ளை ஆழ்வாப்பிள்ளை நேற்று (01.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னர் அமரர்களான வீரப்பாபிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற யோகேஸ்வரின் கணவரும் வாசுகியின் தந்தையும் நகுலராசாவின் மாமனும் நிவேதா, அமிர்தவர்சினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஐயனார் வீதி, பருத்தித்துறை.*

தகவல்: திருநாவுக்கரசு பார்த்தீபன் (பேரமகன்)

## ஆறுமுகம் பொன்னம்பலநாதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை ஹம்டன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலநாதன் காலமானார்.

அன்னார் சிவஹாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் Dr.மனோகரன், மனோகரி (முன்னாள் HNB) ஆகியோரின் தந்தையும் Dr.றஞ்சியின் மாமனும் ஹரிகரனின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (02.06.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கனத்தைப் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83, 3 Hamden Lane,
Wellawatte.

(#/52521)

*தகவல்:* P.மனோகரி *(மகள்)*

## கனகரத்தினம் தேவராசா



**(கவிஞர், உறுதி எழுதுநர்)**

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தேவராசா 31.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசநாயகியின் அன்புக் கணவரும் ஸ்ரீரஜனி (கனடா), சுஜனி (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), குமரன், றஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவ[illegible] ஸ்ரீதரனின் (கனடா) மாமனும் ஜீவராசா, விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரனும் சறோஜினிதேவி (இந்தியா), சிதம்பரநாயகி (கனடா), கணேசமூர்த்தி (கனடா), குகதாசன் (கனடா), இரட்ணேஸ்வரி (கனடா), கணேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சித்தன்கேணியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (02.06.2007) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயிலடி,*
*சித்தன்கேணி.*
*தொ.பே.: 0779648971* (61188)

தகவல்: **றஜீபன்** *(கஜன் - மகன்).*

## சண்முகநாதன் திலகவதி

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சண்முகநாதன் திலகவதி நேற்று (01-06-2007) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சண்முகநாதனின் அன்பு மனைவியும், திலிப்குமார், சண்முகாதேவி, சிவகுமார், காலஞ்சென்ற சுரேஷ்குமார் மற்றும் சண்முகராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், பரமேஸ்வரி, கனகலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.06.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்முகபதி,**
**கே.கே.எஸ். றோட்,**
**கோண்டாவில் மேற்கு.** (61192)

தகவல்: **ச.திலிப்குமார்** (மகன்)

## நீங்காத நினைவலைகள்

**2ஆம் ஆண்டு** **9ஆம் மாதம்**



அமரர்
**வைரமுத்து செல்வமணி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03*05*1935 | 25*05*2005 |



அமரர்
**கதிரவேல் இராசலிங்கம்** (பெயின்ரர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12*08*1955 | 11*10*2006 |

*அன்பின் உறைவிடமாய்*
*அமைதியின் திருவுருவமாய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*இதயத்தில் கலந்த தெய்வங்களே!*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*காளிகோயிலடி,*
*தாவடி தெற்கு, கொக்குவில்.*

குடும்பத்தினர்

(61189)

**FOR SALE**

Pure bread pedigred GREAT DANE (SAND COLOUR) available for sale, male age 10 - Months
0779236341
NO.76, POST OFFICE RD., CHAVAKACHCHERI

(61193)

**Sky Computer System**
No. 89, Kandy Rd, Chundikuli, Jaffna.
Hot-line : 021 222 9109

**Brand New P IV Computer @ Low Price**
Intel Pentium Processor (LGA) 3.0 GHz
Asus Mother Board
Kingston DDR 256 MB
HDD 80GB SATA (Samsung)
Asus CD Drive
FDD
VGA On Board
Spe[illegible] (280W)
AT[illegible]
Key[illegible]
Optical Mouse
15" Monitor (Samsung)

52,500/=
கையிருப்பு உள்ளவரை மட்டும்

| | |
|---|---|
| Scanner Canon LIDE25 | 9500/= |
| ATX Casing | 5250/= |
| Kingston DDR 256MB | 3500/= |

ஞாயிறு திறந்திருக்கும். கச்சேரிக்கு அருகில்.

**கணனிக் கருத்தரங்கு**
மின்வணிகம் E-commerce
03.06.2007 ஞாயிறு காலை 8.30 - 11
கட்டணம் ரூபா. 200 மட்டும்
முற்கூட்டியே பதிவு செய்ய வேண்டும்.

**SPEED IT NET**
பணிக்கர் லேன் திருநெல்வேலி.
தொ.பே.: 021 4591871

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Stramblyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ S[illegible]ing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 04/06/2007- 9.00AM

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 01/06/2007, 02/06/2007, 03/06/2007, 06/06/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

3Months
**Diploma in Computerized Accounting**
**ACCPAC + Quick Books Premier + MYOB**

Course Contents
❖ Manual Accounting
❖ Financial Accounting
❖ Cost Accounting
❖ Taxation (Including VAT)
❖ Stock Control
❖ Bank Reconciliation
❖ Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 02/06/2007
Batch II : 03/06/2007
BatchIII : 07/06/2007
Batch IV: 09/06/2007

**கோழி இறைச்சி விற்பனை**

*பிறிமாக் கோழி இறைச்சி, கல்பேட் வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.*

*தொடர்பு:*
**மல்ரி பாம் சென்ரர்,**
61, இராமநாதன் வீதி,
கல்ட்டி, யாழ்.
(மிலேனியம் ரெஸ்ரோரன்ட் முன்பாக)

## தவறிவிட்டது

சிவானந்தம் இரகுநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (651742900V), விசேட அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன 25.05.2007 அன்று சுன்னாகத்திற்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மகிந்தன் கொம்பியூட்டர் கிராபிக்ஸ், K.K.S. வீதி, சுன்னாகம், ஜெயகிருஷ்ணா இரும்புக் கடை, சுன்னாகம் என் [illegible] தவலும், சன்மானம் வழங்கப்படும்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப வயது 36 ஆசிரியராகக் கடமையாற்றும் சுவாதி, செவ்வாய் தோஷமற்ற பெண்ணுக்கு பொருத்தமான வரன் உள்நாட்டிலோ/ வெளிநாட்டிலோ தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 0776673078

## NSB தேசிய சேமிப்பு வங்கி

### மீட்கப்படாத அடகுப் பொருள்களின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் 2006.03.31 அன்று அல்லது அதற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு 2007.06.15 இற்கு முன்னர் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத அடகுப் பொருள்கள் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| கிளை | ஏல விற்பனை திகதியும் நேரமும் | ஏல விற்பனை நடைபெறுமிடம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம்<br>பருத்தித்துறை<br>சுன்னாகம்<br>சாவகச்சேரி<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி | 30.06.2007<br>01.07.2007<br>காலை 9 மணி | யாழ்ப்பாணக் கிளை<br>இல.496,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி:<br>021 222 2696 |

*மறு அறிவித்தலின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்ய அல்லது திகதியைப் பிற்போடுவதற்கான உரித்தை வங்கி கொண்டுள்ளது.*

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு - 03.
தொலைபேசி: 0112573008

(#/52530)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பட்டப்பின் படிப்புகள் பீடம்

**முதுகலைமாணி - சைவசித்தாந்தம்**
**முதுகலைமாணி - தமிழ்**
**கல்வியாண்டு 2007/2008**

### புதிய அனுமதிகள்

*சுயகொடுப்பனவுக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

***அனுமதிக்கான தகைமைகள்:***

*அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். அல்லது பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக்கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.*

***கற்கைக் காலம்:*** *ஒரு வருடம்*

*சனி, ஞாயிறு கிழமைகளில் விரிவுரைகள் நடைபெறும்.*

***மொழி மூலம்:*** *தமிழ்*

***அனுமதி:*** *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்தும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.*

***விண்ணப்பப் படிவம் பெறும் முறை***

*விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறவிரும்புவோர் மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகக் கிளையில் ரூபா 100/- செலுத்திய பற்றுச்சிட்டை பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.*

*தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 100/- பெறுமதியான காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ அளவுள்ள கடித உறையை உதவிப்பதிவாளர், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.*

*விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 31.07.2007 ஆம் திகதிக்கு முன் கையளித்தல்வேண்டும்.*

**பதிவாளர்.**
**01.06.2007**

(சி/52528)

## ஏழாமாண்டில்



அமரர்.
**அரியகுட்டி சித்திரவடிவேலு**
(குகன்)

உரிமையாளர்:
குகன் ஸ்ருடியோ.
சாவகச்சேரி

ஆண்டவன் படைப்பில்
23-10-1927

யுத்தத்தின் பிடியில்
20-05-2000

திதி :துதியை
(02-06-2007)

| | | |
|---|---|---|
| உங்கள் | விதைப்பில் | உயிரானோம் |
| உங்கள் | உழைப்பில் | பயிரானோம் |
| உங்கள் | இழப்பில் | துயரானோம் |
| உங்கள் | நினைப்பில் | உயர்ந்திடுவோம் |

'துவாரகா'
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகடனப்படுத்தப்படாத போர் பெரும் பணத்தை விழுங்கி அபாயகரமான கட்டத்துக்கு...

பிரபல இராணுவக் களநிலை விமர்சகர் இக்பால் அத்தாஸ் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் கடந்த ஞாயிறு இதழில் (27.05. 2007) எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

★ நெடுந்தீவு தாக்குதல் தொடர்பான செய்திகள் கையாளப்பட்ட முறை நம்பகத்தன்மையை மேலும் மோசமாக்கியுள்ளது.

★ மில்லியன் கணக்கான ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் கொள்முதல் மிகமிக இரகசியமாகச் செய்யப்படுவதால் பிரகடனப்படுத்தப்படாத போர் அபாயகரமான திருப்பத்தை அடைந்துள்ளது

★ றெக்ளமேஷன் வீதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் இராணுவ பஸ்வண்டியைத்தான் இலக்கு வைக்கப்பட்டதா அல்லது வேறு ஏதும் இலக்கு இருந்துள்ளதா?

2002 பெப்ரவரியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதின் பின்னர் நெடுந்தீவிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு ஆதரவாக ராணுவப் பிரிவு ஒன்று அங்கு நிலை கொள்ளச் செய்யப்பட்டது. ஆறு மாதங்களுக்கு முன்னர் நெடுந் தீவின் தென்முனையில் ரடார் அமைப் பொன்றை காவல் புரிவதற்காக உப இராணு வப் பிரிவு ஒன்றும் அங்கு நிலை கொள்ளச் செய்யப்பட்டது. இது கடற்புலிகளின் நடமாட்டங்களை அவதானிப்பதற்காகவே அமைக்கப்பட்டது. தென் இந்திய கடற்கரை களுக்கும் வன்னிப் பகுதிக்குமான கடற் போக்குவரத்துகள் அதிகரித்திருப்பது தெரிய வந்ததையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. பல வருடங்களுக்கு முன் செயற்பட்டு இப்போது பாவனையில் இல்லாத குயீன்ஸ் ரவர் (QueensTower) என்றழைக்கப்படும் கலங்கரை கோபுரத்தில் ரடார் கருவி பொருத்தப்பட்டுள்ளது. கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை நெடுந்தீவு உலகச் செய்திகளின் முக்கியத்துவம் பெற்றது. அன்று அதிகாலை விடிவதற்கு முன் விடுதலைப்புலிகள் அந்த உபபிரிவின் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். ஆயுதங்களுடன் தீவுக்குள் ஊடுருவிய பின் புலிகள் இத்தாக்குதலை நடத்தினார்கள்.

இத்தாக்குதல் நடந்து கொண்டிருந்த போதே அங்கு விரைந்து வந்த கடற்படைக் கலங்களையும் கடற்புலிகளின் படகுகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தின. புலிகளின் படகுகள் விடத்தல்தீவு மற்றும் பூநகரியிலிருந்து அங்கு வந்திருந்ததாகத் தெரிகிறது.

### கொலையுண்டோர் எண்ணிக்கை வேகமாக மாறிக் கொண்டிருந்தன

விசித்திரம் என்னவென்றால், இறந்து போனவர்களில் சிலர் மீளவும் உயிர் பெற்றிருப்பதாக உயர் அதிகாரிகள் கண்டுபிடித்தமைதான்! ஆக நான்கு கடற்படையினரே கொல்லப்பட்டனர் என்றும் வேறு நான்கு பேர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. மேலும் 5 பேர் நெடுந்தீவின் பிரதான இராணுவப் பிரிவுக்குச் சென்றடைந்திருந்தார்கள். காணாமல் போனார்கள் என்று கூறப்பட்ட ஏனைய அனைவரும் திரும்பிவந்து விட்டார்கள் - என்றும் கூறப்பட்டது.

தேசிய பாதுகாப்பு ஊடக நிலையத்தை தவிர கடற்படை அதிகாரியாலும் தனியாக எண்ணிக்கை விவரங்கள் வெளியிடப்பட்டன. சில நாள்களின் பின்னர்தான் கடற்படை பேச்சாளர் ஒருவர் கடற்படை ரோந்துப் பிரிவு ஒன்று புலிகளின் தாக்குதலுக்குள்ளானதாக அறிவித்திருந்தார். ரோந்துப் படை தாக்குதல் நடத்திய புலிகளின் படகு எண்ணிக்கையைவிட அழிக்கப்பட்டதாகக்கூறப்பட்ட புலிகளின் படகு எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது.

கடற்படை உயர் அதிகாரிகள், புலிகளால் கைப்பற்றப்பட்ட கடற்படை உப பிரிவை மீளக் கைப்பற்றுவதற்கு, மேலதிகமாக அனுப்பப்பட்ட படைகளை வழி நடத்துவதில் மட்டும் கடற்படை உயரதிகாரிகள் ஈடுபட்டிருக்கவில்லை என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. சம்பவம் பற்றிய முழுமையான ஒரு வேறுபட்ட காட்சியை மக்களுக்கும் உலகத்துக்கும் காட்டும் செய்தி நிர்வாகத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அதனால்தான் நான் இலங் கையில் இரண்டு யுத்தங்கள் நடப்பதாகக் கூறுவதுண்டு. ஒன்று வடக்குக் கிழக்கு போர்க் களத்தில் நடைபெறுவது. கொழும்பில் வெளியிடப்படும் ஊடக அறிக்கைப் போர் மற்றையது.

இராணுவ மற்றும் கடற்படைகளின் உயர்மட்ட நிலைகளில் ஒருமைப்பாடும் ஒத்துழைப்பும் இயல்பாக இருக்கவில்லை என்பதில் சந்தேகமில்லை. இந்த வாரம் பாதுகாப்புப் படைகளின் தளபதி (யாழ்ப்பாணம்) மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி - குடாநாட் டில் பணியாற்றும் சிரேஷ்ட உயர் அதிகாரி - வட பகுதி கடற்படை தளபதி றியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்காவிடமிருந்து அறிக்கையொன்றை கேட்டிருந்தார்.

ஆனால் நேற்று (மே 27) வரை அவ்வறிக்கை வந்து சேரவில்லை செய்தி நிர்வாகத்திலும் உயர் அதிகாரிகள் தலையிடுகிறார்கள் என்பதற்கு நெடுந்தீவுச் சம்பவம் மிகப் பிந்திய உதாரணமாகும். தகவல் தொடர்பாடல் வெகுவாக முன்னேறியிருக்கும் ஒரு காலத்தில் - செய்தி வெளிப்பாட்டை வெகு நாளைக்குக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலையில், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதாகக் கூறுபவர்களால் செய்திகள் நிர்வகிக்கப்படுவதானது, அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

### கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பு

நெடுந்தீவுத்தாக்குதல் இடம்பெற்ற சில மணித்தியாலங்களுக்குள் கொழும்பில் றெக்ளமேஷன் வீதியில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த கிளேமோர் குண்டு வெடித்தது. கொழும்புத்துறை முகத்தின் எல்லையைக் குறிக்கும் சுவருக்கு வெளியில் இவ்வீதி அமைந்துள்ளது. அதனால் பஸ்ஸில் இருந்த ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். மூவர் காயமுற்றனர். பொதுமக்கள் மூவரும் காயமுற்றனர். இராணுவ பஸ்தான் அக்குண் டின் இலக்காக இருந்துள்ளதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இந்தக் குண்டை புலி உறுப்பினர் ஒருவர் தூரத்தில் இருந்து இயக்கி வெடிக்க வைத்திருக்க வேண்டும் என்று புலனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இன்னொரு அம்சம் என்னவென்றால் யாராவது மிகமுக்கிய பிரமுகர் இலக்கு வைக்கப்பட்டிருந்துள்ளாரா என்பதாகும்.

### புதிய தாக்குதலுக்கு புலிகள் ஆயத்தம்

ஒரு குறுகிய கால ஓய்வுக்குப் பின் இரண்டு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதானது, புதிய தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. வடக்கு கிழக்கில் புலிகளின் நிலைகள் மீது ஆயுதப் படைகள் வரையறுத்த தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில் இது நடந்துள்ளது.

இந்தப் பின்னணியில் அரசாங்கம் நான்கு மிக் - 29 பன்முக தாக்குதல் திறன்கொண்ட விமானங்களை ரஷ்யாவிடமிருந்து குறுகிய - நெடுங்கால கடனில் கொள்முதல் செய்ய முற்பட்டிருப்பது பற்றி நாம் தகவல் வெளியிட்டிருந்தது சர்ச்சையொன்றை உருவாக்கியுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள லங்கா லொஜிஸ்டிக்ஸ் அன் ரெக்னொ லொஜீஸ் நிறுவனத்தினால் மிக் - 29 மற்றும் இராணுவ பொருள் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கம், இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ்படைகளுக்கும் வேறு அரச நிறுவனங்களுக்கும் கருவிகள் உபகரணங்கள் கொள்முதல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவதாகும்.

பாதுகாப்பு மற்றும் சட்ட, ஒழுங்கு அமைச்சர் என்றமுறையில் ஜனாதிபதி மகிந்த ரஜபக்ஷவின் சிபாரிசின் பேரில் இந்த நிறுவனம் அமைப்பதற்கான முன்மொழிவை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. இந்த அங்கீகாரத்தைத் தவிர, அரசாங்கத்தால் குறிக்கப்பட்ட கொள்முதல்கள் தொடர்பான கொள்கை வழிகாட்டலுக்கு மாறாக செயல்படுவதற்கு அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை.

**தொகுப்பு: நந்தன்**

இந்தப் புதிய நிறுவனம் ஊழல்களைத் தவர்க்க உதவ இருக்கும் என்று கூறப்பட்ட போதிலும் கேள்விகள் பல எழுந்த வண்ணம் உள்ளன.

முதலாவது வெளிப்படைத் தன்மை தொடர்பானது. அடுத்த முக்கிய கேள்வி, ஒரு நல்ல பொருள் சாதகமான விலைக்கு பெறப்படுமா என்பதாகும். ஏனையவற்றில் சமீபகால கொள்முதல்களின்படி உள்ளூர் முகவர்களின் பங்களிப்பு நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை. வழங்குநர்கள் அரசாங்கத்தின் நெருக்குதலின் பேரில் தமது முகவர்களை நீக்கிவிட்டாலும் ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது, அவர்களை நன்றாகவே கவனித்துக்கொள்கின்றனர்.

வியாபாரத்தின் விவர நுணுக்கங்கள், மற்றும் யாரைப் பிடித்தால் காரியம் ஆகும் என்பவற்றில் இவர்கள் பெரியதும் உதவியாக இருக்கிறார்கள்.

எனவே, ஆயுதப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், மற்றும் திறைச்சேரியின் செயலாளர் முதலியவர்களை பங்குதாரர்களாகக் (7ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அதிபர் சேவை நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் விவரம்

அதிபர் சேவை தரம் 2 - II இற்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 540 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்தவாரம் அளவில் நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் ஒரு பகுதியினரின் விவரம் வருமாறு:-

பி.குஞ்சரம்மா (நல்லூர் இ.த.பெ.பா), கே.சௌந்தராதேவி (யா/மத்திய கல்லூரி), ஏ.எஸ்.ஆர்.பற்றிக் (கொழும்புத்துறை இந்து ம.வி.), கே.திருச்செல்வம் (கொக்குவில் இ.க.), எஸ்.லக்ஸ்மிகாந்தன் (உயரப்புலம் எம்.எம். த.க.பா.), ரி.ஞானப்பிரகாசம் (புனித ஜேம்ஸ் ம.வி.), வி.சத்தியபாலன் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பா.), எல்.லிங்கேஸ்வரன் (யாழ். இந்து ம.க.), ஆர்.ரஜனி (கோப்பாய் தெற்கு றோ.க.த.பா.), கே.வாகீசன் (புத்தூர் சோமஸ்கந்தா), என்.முரளீதரன் (புத்தூர் சோமஸ்கந்தா), கே.கேதீஸ்வரன் (புத்தூர் சோமஸ்கந்தா), கே.திருஞானசம்பந்தன் (யாழ். மத்திய கல்லூரி) -

எஸ்.ரூபசிங்கம் (நல்லூர் ஆனந்தா வித்தி.), எஸ்.எல்.ஏ.சுபத்திரா (புனித ஜேம்ஸ் பெ.பா.), ஜெ.தவேந்சன் (புனித ஜேம்ஸ் பெ.பா.), எஸ்.கமலாதேவி (மானிப்பாய் விவேகானந்தா வித்தி.), கே.ஜெயந்தன் (கோப்பாய் கிறிஸ்தவ. க.), கே.திருப்பதி (கோப்பாய் கிறிஸ்தவ. க.), எ.பவளம் (கொழும்புத்துறை இ.ம.வித்தி.), என்.பரமேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி), எம்.ஜே.இராஜரட்ணம் (யாழ். மத்திய கல்லூரி), வி.சிவலீலாதேவி (புத்தூர் சோமஸ்கந்தா), ஏ.சூரியவதனி (ஆனைப்பந்தி ம.ம.வித்தி.), பி.இராமகிருஷ்ணன் (கொட்டடி நமசிவாய வித்தி.), எஸ்.ரி.கிளீவ்லெண்ட் (புனித ஜோசெப் வித்தி.), எம்.கருணாநிதி (கொக்குவில் இந்து), ஏ.விஜயநாதன் (பெரியபுலம் ம.வி.), ஜி.ஸ்றைன் (வேம்படி), எஸ். இளங்கோ (கொக்குவில் இந்து), வை.ஜெகாந்தம் (கொக்குவில் இந்து), ஆர்.சாந்தினி (உயரப்புலம் அ.த.க.பா.) -

ரி.விஜேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி), பி.செல்வநாயகம் (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.), எஸ்.கருணாகரன் (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.), எஸ்.கருணாகரன் (கனகரத்தினம் மத்திய ம.வி.), எம்.பிரியம்வதா (வேம்படி), ஏ.லோகாதன் (யாழ். மத்திய கல்லூரி), பி.யூக்கிறிஸ்ரின் (யாழ். மத்திய கல்லூரி), கே.சிவராஜா (புனித மேரிஸ் றோ.க.த.க. பா.), ஜெ.சிவபாதம் (புனித மேரிஸ் றோ.க.த.க. பா.), பி.ஜே.பற்றிக் (திருக்குடும்ப கன்னியர்மடம்), எஸ்.சிவபாதம் (யாழ். மத்திய கல்லூரி), சி.சிவலிங்கம் (உயரப்புலம் அ.த.க.பா.), எஸ்.பஞ்சாட்சரம் (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி.), கே.விஜயரகுநாதன் (நல்லூர் இ.த.பெ.பா.), எஸ்.கோகிலன் (யாழ். இந்துக் கல்லூரி), பி.தாமோதரகுமார் (கொக்குவில் இந்து), சி.எஸ்.ஆர்.செல்வகுணாளன் (யாழ். மத்திய கல்லூரி), வி.சிவநேசன் (ஒஸ்மானியாக் கல்லூரி), எம்.சிவானந்தன் (இடைக்காடு ம.வி.), பி.ஜெயரட்ணராஜா (யாழ். இந்துக் கல்லூரி) -

பி.குகதாசன் (யாழ். வலய அலுவலகம்), வி.தியாகராஜா (கோண்டாவில் இ.ம.வி.), வி.சிறிகணேஸ் (யாழ். இந்து மகளிர்), ரி.தயாளன் (யாழ். மத்திய கல்லூரி), ஜி.பரந்தாமன் (முத்துத்தம்பி ம.வி), எஸ்.திவாகரன் (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), கே.சிறிதரன் (யாழ் மத்திய கல்லூரி), டி.பாலசுப்பிரமணியம் (சென். அன்ரனிஸ் வித்தி.), கே.கனகேஸ்வரி (உரும்பிராய் இந்து), பி.சிவசித்திரா (யாழ் இந்து மகளிர் வி.), இ.தியானமுத்து (சென். அன்ரனிஸ் வித்தி.), வி.ஜனார்த்தனகுமாரி (யாழ் இந்து மகளிர் வி.), வி.எஸ்.மகேந்திரன் (யாழ் மத்திய கல்லூரி), ரி.சிவகுமாரன் (யாழ் மத்திய கல்லூரி), எம்.பிலிப் தம்பிராஜா (புத்தூர் சோமஸ்கந்தா), கே.றஜனி (புத்தூர் சோமஸ்கந்தா), ஆர்.லோகேஸ்வரன் (கரந்தன் ராமுப்பிள்ளை வித்தி.), பி.சற்குணநாதன் (புத்தூர் சோமஸ்கந்தா).

ஆர்.ராஜேஸ்வரன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ்.லோகேஸ்வரன் (யாழ். மத்திய கல்லூரி), எம்.சிவபாலன் (வேம்படி மகளிர்), பி.பாலபவன் (புத்தூர் சோமஸ்கந்தா), எஸ். விஜயரத்தினம் (யாழ். மத்திய கல்லூரி), இ.எப்.ஆர்.ஜெயக்குமார் (யாழ். மத்திய கல்லூரி), என்.சந்திரகுமார் (சென். ஆன்ஸ் றோ.க.த.க.பா), ஆர்.அரசகுலசூரியன்ராஜா (கனகரத்தினம் ம.ம.வி.), கே.நவரத்தினராஜா (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா), வி.நவரட்ணராஜா (வேம்படி), ரி.ஜெகதீஸ்வரன் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.), பி.ஸ்ரீஸ்கந்தராஜா (யாழ். மத்திய கல்லூரி), ரி.முத்துலிங்கம் (புனித ஜேம்ஸ் ம.வி.), ஏ.சிவபாதம் (ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா), ஏ.சண்முகம் (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி.).

கே.விஜயகுமார் (புத்தூர் சோமஸ்கந்தா), எஸ்.மோகனராஜன் (புத்தூர் சோமஸ்கந்தா), எஸ்.ரவிச்சந்திரன் (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), ஜெ.ஏ.தவநாயகம் (யாழ். வலயம்), எம்.ரங்கநாதன் (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி.), கே.விஜயதேவன் (இடைக்காடு ம.வி.), கே.ரவிச்சந்திரன் (புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி.), வி.கனகநாயகம் (செங்குந்த இ.க.), எஸ்.ரவீந்திரராஜா (திருக்குடும்ப கன்னியர்மடம்), ஜே.தர்மஜீலன் (செங்குந்த இ.க.), ரி.தயாபரராஜா (நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பா), எஸ்.ஆர்.குபேந்திரதாஸ் (திருநெல்வேலி இந்து ம.வி.), எஸ்.திரிகரன் (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி.), என்.தயாளன் (கொழும்புத்துறை இந்து ம.வி.), என்.ராஜகுமாரன் (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.), கே.சிவஞானம் (யாழ். இந்து ஆ.பா.).

தி.தியாகராஜா (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.), எஸ்.தர்மரத்தினம் (அத்தியார் இந்து) என்.சபாநாயகம் (யாழ் இந்துக் கல்லூரி), எஸ்.இளங்கோ (உயரப்புலம் மெ.மி.த.க.பா.), ஜே.சேவக்கொடியோன் (இளையதம்பி இந்து ம. வித்தி.), சே.ரட்ணேஸ்வரன் (தேசிய கல்வியற் கல்லூரி), ரி.சண்முகலிங்கம் (திருநெல்வேலி இந்து த.க.பா.), எஸ்.புஸ்ப[illegible] வைத்திலிங்கம் வித்தி.), எஸ்.சிவநேசராஜன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஆர்.பசுபதீஸ்வரன (செங்குந்த இந்து), கே.சண்முகராஜா (யாழ். இந்துக் கல்லூரி), எம்.ஜீவந்தி (புனித ஜோன் பொஸ்கோ வித்தி.), எஸ்.நந்தகுமார் (ஒஸ்மானியாக் கல்லூரி), இ.ஜே.புத்திசீகாமணி (கொழும்புத்துறை இந்து ம.வி.), ரி.உதயநாதன் (கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி.), எஸ்.லவீசன் (புத்தூர் சோமஸ்கந்தா), ஏ.ஆனந்தராஜா (கொக்குவில் இந்து), ஆர். ரவிச்சந்திரன் (கொக்குவில் இந்து), என். கந்தவனச் செல்வனம் (கொக்குவில் இந்து), ஜி.செல்வராஜா (கொக்குவில் ராம கிருஷ்ணா வித்தி.).

ரி.ஞானசுந்தரன் (வேம்படி), ஏ.எம்.சி. மகேந்திரன் (யாழ். மத்திய கல்லூரி), பி.இளமுருகரன் (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.), ஜி.ஏ.பிரேமதாஸ் (உரும்பிராய் சந்திரோதய வித்தி.), பி. கணேசன் (கோப்பாய் கிறிஸ்தவ க.), கே.கனகலிங்கம் (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), எம்.ஆனந்தராஜா (தேசிய கல்வியியற் கல்லூரி), கே.ஆர்.கமலநாதன் (தேசிய கல்வியியற் கல்லூரி), எஸ்.ஆர். சத்தியேந்திரபிள்ளை(தேசிய கல்வியியற் கல்லூரி), கே.ரவிச்சந்திரன் (ஒஸ்மானியா கல்லூரி), ஏ.செங்கதிர்செல்வன் (யாழ். இந்து மகளிர்), எஸ்.சர்வகுணசீலன் (கோண்டாவில் இந்து.ம.வி.), செந்தில்வடிவேலு (வேம்படி), கே.தவரஞ்சன் (யாழ். மத்திய கல்லூரி), பி.குணதேசிகன் (யாழ். இந்துக்கல்லூரி), ஏ.நிலானி (கொக்குவில் ஸ்ரீ இராமகிஷ்ண வித்தி.), எஸ்.சற்குணநாதன் (புனித சாள்ஸ் ம.வித்தி.), வி.கனகசபாபதி (புனித சாள்ஸ் ம.வித்தி.) -

எஸ்.தயாபரன் (உரும்பிராய் சந்திரோதய வித்தி.), எஸ்.தியாகலிங்கம் (யாழ். இந்து ஆரம்ப பா.), கே.குகானந்தன் (அத்தியார் இந்துக்கல்லூரி), ரி.தேவதயாளன் (தேசிய கல்வியியற் கல்லூரி), எஸ்.பகீரதி (யாழ். இந்து மகளிர்), எஸ்.பகீரதன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), டி.எம்.வித்தியானந்தநேசன் (கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பா.), ரி.அருள்மொழி (வேம்படி), எஸ்.விவேகானந்தன் (கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பா.), வி.உதய குமார் (கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி.),

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.செ.ஜோன்ஸ் கல்லூரியின் உப அதிபராக அண்மையில்
S.கிலிபேட் அன்ரனிப்பிள்ளை (B.A.,Dip.in.Ed.)
நியமனம் பெற்றுள்ளார்.

விளையாட்டுத்துறையிலும் விற்பன்னரான இவர் கடந்த 3 வருடங்களாக யாழ்.உதைபந் தாட்ட லீக்கின் தலைவராகவும், யாழ்.உதைபந் தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உபதலைவராகவும் கடந்த 14 வருடங்கள் கடமையாற்றி வருகின்றார். மேலும் இவர் Grade B தரம் பெற்ற உதைபந்தாட்ட பயிற்றுநர் என்பதும் யாழ்.மாவட்ட விளையாட்டு பேரவையின் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் உதைபந்தாட்டத்திற்கு ஆற்றி வரும் அளப்பெரும் சேவையை பாராட்டி அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் 31.03.2001 ஆம் ஆண்டு தேசிய விருதை வழங்கியமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இவரது சேவை மேன்மேலும் வளர எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். (61121)

வாழ்த்துபவர்கள்:
உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க தலைவர் கப்ரின் D.A.M.குணசிங்கம்(JP)
மற்றும் சங்க உறுப்பினர்கள்.

## நீங்களும் விண்ணப்பிக்கலாம்

உளசமூகப் பணி மற்றும் உளவளத்துணை தொடர்பான கற்கை நெறியானது மிக விரைவில் அஞ்சல் வழி உளசமூக அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்வஞ்சல் வழிக் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமை: க.பொ.த.(சா/த)
- பயிற்சிக்காலம்: ஒரு வருடம்
- மாதத்தில் ஒரு நாள் விளக்க வகுப்புகள் நடைபெறும்.

பயிற்சி பற்றிய மேலதிக தகவல்களை சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை அனுப்பி/அலுவலகத்திற்கு நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**மாவட்ட இணைப்பாளர்,**
**விழி உளசமூக மேம்பாட்டு அமையம்,**
இல.35, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
OR
இல.40, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 9115 (61157)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வைரவி முருகேசு**

மலர்வு: 11-04-1948
உதிர்வு: 13-06-2006
திதி: 02-06-2007

*எங்கள் தந்தையே!*
*உங்கள் அறிவுரைகளும்*
*காட்டிய நல்வழிகளும் - என்றுமே*
*எம்மை விட்டு நீங்காது.*

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

மம்மி சிற்றி,
மயிலணி,சுன்னாகம். (61025)

## BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்
அநேக மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் புதிய பிரிவு
**O/L DAY CLASS**
(எமது Super Grade ஆசிரியர் குழு)
ஆரம்பம்: 04 06 2007
(61026) நேரம் 8.00 a.m.

## 2009 A/L

அளவையியல்
P.கமல்
ஆரம்பம்:
02-06-2007
பிற்பகல் 4.00மணி
- அலகுகள் வழங்கப்படுகின்றன
- தனியான அலகுகளுண்டு.

பொலிகண்டி
ஆக்கடமி
(61161) புங்கன்குளம்

## விற்பனைக்கு

TOSHIBA கொம்பியூட்டர்
லப்டப்
PENTIUM - 4 விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: T.P.NO.: 077 3715867 (61175)

## ஆங்கில வகுப்புகள்

[illegible] N.G.O. [illegible] Monthly Reports [illegible].
தொடர்பு: No.9, பிளைச்சர் ஒழுங்கை,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்
யாழ்ப்பாணம். (61048)

## புறொயிலர் இறைச்சி

ஐஸ் புறொயிலர் இறைச்சி மற்றும் 10 நாள்கள் நிரம்பிய சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு.
**NEW R.S.K. FARM**
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (61050)

## வீடியோ படக்கொப்பிகள்

புதிய, பழைய வீடியோ படக் கொப்பிகள் விற்பனைக்கு உண்டு
**NEW R.S.K. FARM**
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (61196)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சி (ஐஸ்), ஊர்ச்சேவல் வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (61045)

## STUDY IN LONDON

**Spot Admission**
**Hurry for the June - July Batch**

WITHOUT IELTS

**IELTS** இல்லாமல் எனக்கு **College admission** கிடைத்ததையிட்டு பெரும் வாய்ப்பாகக் கருதுகின்றேன். பகுதிநேர வேலையினையும் என்னால் பெறமுடிந்தது. அனுமதி பெற்ற மாணவன்

Dip. in Export & Import Mgt. Dep in Shopping & Logistic Mgt. Adv Dip in Tourism Mgt. Bachelor of Bus Administration (BBA), Master of Bus Administration (MSc), Information Technology, Master of Information Tech, Bachelor in Law (LLB), Master in Law (LLM), M.A. in Education, Hotel Mgt. Msc in Health Mgt. Msc International Banking & Finance, BSc Accounting Finance, International Marketing, Adv Dip in Travel & Tourism Mgt. Cabin Crew & Many More Courses...

**Admission Letter within 5 days**

- பல்துறை சார்ந்த **Diploma Degree, Master Degree** கற்கைநெறிகள்.
- 60 இற்கு மேற்பட்ட **University / College** இனை தெரிவுசெய்யும் வாய்ப்பு
- **Part time** வேலை **Airport** ஒழுங்கு குறைந்த கட்டணத்தில் வதிவிட வசதிகள் செய்து தரப்படும்.
- அனுபவமும் தனித்துவமுள்ள சட்டத்தரணிகளால் விசா **100%** பெற்றுகொள்ள உதவி செய்து தரப்படும்


**Eisc EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**
**#15, Sirambiyadi Lane, (Off Stanly Rd.) Jaffna**
**Phone : 021-222 8250, 0777 222422**

## INTERNATIONAL SCHOOL MANIPAY

Sangarapillai Road Manipay
சர்வதேச பாடசாலை மானிப்பாய்
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்




## பாராட்டி வாழ்த்து



அருட்தந்தை
**ம.பெ.ஞானரத்தினம்**
அவர்களின் சாதனைகள்
பல தொடர வாழ்த்துகின்றோம்.
சட்டங்கள் பல பயின்று கலாநிதிப்
பட்டம் பெற்றவரே- உமது
மகத்தான சேவையிலே - எம்
மறை மாவட்டம் பொலிவு பெற - எம்
அன்னையின் ஆசி வேண்டி
அன்பு நிறை வாழ்த்துக்கள்

(61111)

ம.அரியம் குடும்பம், ம.ஜோசப் குடும்பம்,
இ.ஜேம்ஸ் குடும்பம்,
(ஜேர்மனி).

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி**
**சிவஞானரத்தினம்**
(சின்னராசா, S.S.R.)

தோற்றம்: 10 08 1927
மறைவு: 08-06-1982

திதி: அபரபட்ஷ துதியை (02-06-2007)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.

*'முருகன் அருள்',*
*நீதிராசா வீதி,*
*கொக்குவில் மேற்கு.* (61148)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### பழனி புவனேஸ்வரி (பவளம்)



மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 29, வைமன் வீதி, நல்லூர் முகவரியில் வசித்தவரும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமான திருமதி பழனி புவனேஸ்வரி அவர்கள் 26.05.2007 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (தச்சுக்குஞ்சப்பா) - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னு- லட்சுமி தம்பதியரின் மருமகளும், பழனியின் (இளைப்பாறிய இ.போ.ச.உத்தியோகத்தர், பிரான்ஸ்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சின்னப்பிள்ளை ஆகியோரின் முறையே மைத்துனியும் சகோதரியும் காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் தங்கவடிவேல், திருச்செல்வம் (அமரர்), வாமதேவன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகதாஸ் (பிரான்ஸ்), லோகேந்திரன் (பிரான்ஸ்), லோகேந்திரராணி (பிரான்ஸ்), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), லோகநாதன் (பிரான்ஸ்), லோகறஞ்சினி (பிரான்ஸ்), லோகச்சந்திரன் (பிரான்ஸ்), லோகறஞ்சன் (லண்டன்), லோஜினி (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயரஞ்சினி, கவிதா, புதுமைலோலன், லோஜினி, கௌரி, சௌந்தரராஜன், பேரின்பச்செல்வி, ரவிக்குலன் ஆகியோரின் அன்பு மாமியும், கிசோக், லியானா, லோஎன்போ, சோபியா, டாமியன், செலின், செசில், லொறினா, லினோ, லசான், லௌலியா, லோகியா, லவன், மேகலன், சாரங்கன், பாருயன் ஆகியோரின் ஆசைப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.06.2007) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பொ.பழனி** (கணவர்-பிரான்ஸ்),
T.P.: 0033626892443
**வ.சந்திரன்** (மைத்துனர்),
**ச.சறோஜினிதேவி** (சகோதரி).

*29,வைமன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (61167)

### திருமதி கிருஸ்ணசாமி சந்திராதேவி



வல்வெட்டி, மருந்தாவளவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணசாமி சந்திராதேவி 29-05-2007 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கிருஸ்ணசாமியின் அன்பு மனைவியும் ராசா- மனோன்மணி தம்பதியரின் புதல்வியும் ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற மல்லிகா, கமலா (கனடா), விமலா(சுவிஸ்), மனோகரதாஸ் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் கனடாவில் வசிக்கும் சுபாஸ்கரன், றஜிகரன், சுபாஜினி, றசோஜினி ஆகியோரின் அன்புத் தாயும் கனடாவில் வசிக்கும் நிருபன், ஜீவா, யாழினி, மனோஜா, பிரான்ஸில் வசிக்கும் மாதுரி, ஜெனிற்றா,பவித்திரன் ஆகியோரின் அருமை மாமியும் அபிஷா, நிவிஷா, சுபேதா, ஆரதி, சந்தியா ஆகியோரின் பேர்த்தியும் நீலகண்டன் (வல்வெட்டி), வல்லிபுரம் (கனடா), சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்) இராஜலக்சுமி (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும் கீர்த்தனா, டயானி, ரம்மியா, மிதுனா ஆகியோரின் அன்பு பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2007) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
416 -299 - 3734
(கனடா)

(61174)

தகவல்:
**க.தியாகராசா,**
சூராவத்தை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா வைத்தியசாலையின்
# முதியோருக்கான வெளிநோயாளர் பிரிவை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.போதனா வைத்தியசாலையின் முதியோர்களுக்கான வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு கடந்த சில மாதங்களாக செயலிழந்துள்ளது. இதனால் சிகிச்சைக்கென வரும் முதியோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

முதியோரின் நலன் கருதி இச் சிகிச்சைப் பிரிவை மீண்டும் இயங்க வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

போதனா வைத்தியசாலையில் 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கென தனியான வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு ஒன்று இயங்கியது. பல வருடங்களாக செயலிழந்திருந்த இப்பிரிவு பலரின் முயற்சியை அடுத்து மீண்டும் இயங்கியது. எனினும் கடந்த சில மாதங்களாக அது செயற்படவில்லை.

இதனால் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் மற்றவர்களுடன் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தே முதியோரும் சிகிச்சை பெற வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தப் பிரிவை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதியோர் தரப்பில் வலியுறுத்தப்படுகிறது. (207-78)

# பொதுச் சுகாதார பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நிலவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவி வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒன்றரை வருடங்கள் பயிற்சி வழங்கப்படும். 31.12.2006 ஆம் திகதி 18 - 30 வயதிற்குட்பட்ட, ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தில் உயிரியல் அல்லது விலங்கியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையிலும் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை 'மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சுகாதார பரிசோதகர் பதவிக்கான ஆள்சேர்ப்பு - 2007' எனக் குறிப்பிடுதல் வேண்டும். (202)

# தென்மராட்சியில் சட்டவிரோத மரம் தறிப்பு அதிகரிப்பு
## பல பயன்தரு மரங்கள் நாசம்

யாழ்ப்பாணம்,ஜூன் 2

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக சட்டவிரோதமாகப் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதால் இயற்கை வளம் அழிந்து செல்லும் நிலைமை ஏற்பட்டு வருகிறது என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதி மூடப்பட்டதையடுத்து மாவட்டத்தில் பெரும் அளவில் விறகுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் ஆள்களில்லாத காணிகளில் சட்டவிரோதமாக பயன்தரு மரங்களைத் தறிப்பது தற்போது வாடிக்கையாகிவிட்டது.

எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் வேறு காரணங்களால் தமது குடியிருப்புகள், காணிகளை விட்டு மக்கள் வெளியேறிய பகுதிகளிலேயே இவ்வாறான சட்டவிரோத மரந்தறித்தல் இடம்பெற்று வருகிறது.

மா, பலா, வேம்பு, பூவரசு, பனை, தென்னை உள்ளிட்ட மரங்கள் தறிக்கப்பட்டு முழுதாகவே ஏற்றிச் செல்லப்படுகின்றன. வேலிப் பாதுகாப்பாக வளர்க்கப்பட்ட பூவரசு மரங்களே அதிக அளவில்வெட்டப்பட்டு வருகின்றன.

தினமும் பெருமளவு வாகனங்களில் மரங்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் விரைவில் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை நீடிக்காதிருக்க சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் உடனடியாகச் செயற்பட்டு பிரதேச வளத்தைக் காப்பாற்ற வேண்டும் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(202-207)

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 2

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசை நடைபெற உள்ளது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனின் விசேட சொற்பொழிவும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 2

அகில இலங்கை திருமுறை மன்றம் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள கடையிற் சுவாமி சிவன் ஆலயத்தில் திருஞான சம்பந்தர் குரு பூசையை நடத்தவுள்ளது.

இதில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் முற்றோதலும் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திலும் இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது. (203)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் க. இராசேந்திரம் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் க.கதிரேசு கலந்துகொள்வார். (50-95-100)

## பண்டத்தரிப்பு இந்துவுக்கு புதிய நூலகம்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு என புதிதாக நூலகம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. நூலகத்திற்கான கட்டடம் அமைப்பதற்கென கல்வியமைச்சின் பாடசாலை அபிவிருத்தி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் தகவலைக் கல்லூரி அதிபர் ப.சிறிவிக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

# தியாகி கந்தசாமியின் 60 ஆவது நினைவு விழா



யாழ்ப்பாணம்,ஜூன்2

தியாகி கந்தசாமியின் 60 ஆவது ஞாபகார்த்த விழாவும் வட்டு. தெற்கு கிராம உத்தியோகத்தர் சி. நாகரத்தினத்தின் சேவை நலன் பாராட்டு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வட்டு. கார்த்திகேய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக வட்டு. அடைக்கலம் தோட்ட கந்தசாமி கோயிலில் இருந்து விழா மேடை வரை ஊர்வலம் நடைபெறும்.

ஞாபகார்த்த விழாவிற்கு சி.இராமச்சந்திராவும் பாராட்டு விழாவுக்கு திருமதி ச.கருணாநிதியும் தலைமை வகிப்பர்.

நிகழ்வில் ஞாபகார்த்த உரைகளை கு.சிவஞானம், பெ.கனகரத்தினம், மு.சண்முகம், ஆர்.தவராசா, சொ.சிவபாலன், ச.தியாகலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் 'ஆணின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் பெரிதும் துணை நிற்பது தாயா? தாரமா? என்னும் தலைப்பிலான பட்டிமன்றம், வட்டு.கண்ணகை அம்மன் கோயில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு என்பனவும் இடம்பெறும். (202)

# வடமராட்சியில் எரிபொருள் தட்டுப்பாடு; வீதியோரம் அதிக விலையில் தாராளம்

உடுப்பிட்டி, ஜூன் 2

வடமராட்சியில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடாக உள்ள போதும் வீதியோரங்களில் தாராளமாகக் கிடைக்கின்றது. எனினும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வீதியோரக் கடைகளில் ஒரு லீற்றர் பெற்றோல் 200 ரூபா முதல் 250 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. பெற்றோலை நியாய விலையில் பெற உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-155)



பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நிகழ்வு அண்மையில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் வித்தியானந்தனின் உருவப் படத்திற்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மலர்மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கலாசார மன்றத் தலைவர் எஸ். சிவகுமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## சான்றிதழ் பெற அறிவுறுத்து

குருநகர்,ஜூன்2

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பயிற்சிநெறிகளில் கற்றுபூர்த்தி செய்த பயிற்சியாளர்கள் தமது சான்றிதழ்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இதேநேரத்தில் இக்கல்லூரியில் விரைவில் ஆரம்பமாகவுள்ள கடலக இயந்திரவியல் பயிற்சி நெறியைப் பயில விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறும் அவர் கோரியுள்ளார். (202-51)

## கெடுபிடிகள் குறித்து மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்2

கைதடி நவபுரம் பகுதியில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக அப்பகுதியில் வசிக்கும் சில குடும்பங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளன.

அடிக்கடி தமது வீடுகளுக்குள் நுழையும் இராணுவத்தினர் தம்மை அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொள்வதாகவும் இதனால் பெண் பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்தக் குடும்பங்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளன. (அ-50)

## குடும்ப மேற்பார்வையாளருக்கு பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது

வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட குடும்ப நல மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 12ஆம் திகதி பண்ணை பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இவ் பயிற்சி நெறி மூன்று மாத காலத்துக்குத் தொடர்ந்து நடைபெறும் என்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார். (50)

# குடாநாட்டில் படையினரும் பொலிஸாரும் போக்குவரத்து வசதி இன்றிப் பெரும் சிரமம்
## விடுமுறையில் தெற்கே வந்து திரும்ப நாள் கணக்கில் காத்திருப்பு

கொழும்பு, ஜூன் 2

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் பெரும் போக்குவரத்து நெரக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். படையினருக்கான போக்குவரத்துகள் முடங்கிப்போய் உள்ளதால் தெற்கே விடுமுறையில் திரும்ப வேண்டிய படையினரும் பொலிஸாரும் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர் என்று கொழும்பில் தகவல் வெளியாகி உள்ளது.

குடாநாட்டுப் படையினரின் போக்குவரத்து நிலைமை தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று பல தகவல்களை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வியாழக்கிழமை ஏறத்தாழ 1,600 படையினர் பலாலி வான்படைத்தளத்தில் காத்திருந்தனர். அவர்களில் பலர் பல நாள்களாக அங்கு காத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

விமானப்படையினர் கடந்த வியாழக்கிழமை பலாலிக்கு இரு விமான சேவைகளையே நடத்தியிருந்தனர். ஆனால் மறுநாள் எந்த சேவையும் நடைபெறவில்லை.

விமானப் படையினரிடம் தற்போது உக்ரேய்ன் தயாரிப்பான ஒர் 'அன்ரனோவ் -32' ரக விமானமே பாவனையில் உள்ளது. ஏனையவை பராமரிப்பு வேலைகளுக்காக தரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

1995 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் வான்படையினரின் 'அவ்ரோ - 748' ரக விமானங்கள் விழுந்து நொருங்கிய பின்னர் விமானப்படையினர் 'அன்ரனோவ் - 32' விமானங்களை கொள்வனவு செய்திருந்தனர். அவையே தற்போது படையினரின் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன.

அரசிடம் போதுமான அளவு போக்குவரத்து வசதிகள் அற்ற நிலைமையே படையினர் தப்பி ஓடுவதற்கான பிரதான காரணம் என்று தெரிவித்துள்ள பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர், யாழ். குடாநாட்டிற்குச் செல்வதற்கும் அங்கிருந்து வெளியேறுவதற்கும் உள்ள போக்குவரத்து வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

## நியமனம்

யாழ்ப்பாணம்.ஜூன் 2

நவாலி மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக இரா.வசந்தகுமார் நியமனம் பெற்றுள்ளார். கடந்த மூன்று வருடங்களாக இவ் வித்தியாலய அதிபராக சேவையாற்றிய புண்ணியமூர்த்தி சிறிவிக்கினேஸ்வரன் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (202-95)

## செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இன்றும் நாளையும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளன.

தரம் 9 இற்கு சுகாதாரமும் உடற் கல்வியும் கற்பிக்கும் சண்டிலிப்பாய், சங்கானை கோட்ட ஆசிரியர்களுக்கு இன்றும் உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு நாளையும் இராமநாதன் கல்லூரியில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

தரம் 11 இல் சமூகக்கல்வி கற்பிக்கும் நான்கு கோட்டங்களையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இன்று மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் தரம் 6இல் செயல்முறைத் திறன் கற்பிக்கும் உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு இன்று இராமநாதன் கல்லூரியிலும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

தரம் 06 தொடக்கம் 11 வரை சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட சங்கீத பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் இணுவில் மத்திய கல்லூரியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. (203-69)

## நிகழ்வுகள்

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 'முரண்பாடுகளும் அவற்றுக்கான தீர்வுகளும்' என்னும் விடயம் தொடர்பான கருத்துரை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அருட்தந்தை எஸ்.இராசநாயகம் அடிகளார் கருத்துரை நிகழ்த்துவார். (203-86)

* * *

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

அச்சுவேலி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடலும் மதிய போசன விருந்தும் இன்று சனிக்கிழமை நடைபெறும். மன்றத்தின் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவாச்சாரிய அபிஷேக அழைப்பு



நிகழ்வுறும் மங்களகரமான சர்வசித்து வருடம் வைகாசி மாதம்
20 ஆம் நாள் (03-06-2007) ஞாயிற்றுக்கிழமை
மூல நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தில்
காலை 6.45 முதல் 8.24 மணிவரையுள்ள
மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில்

அல்வாய் வடமேற்கு (திக்கம்) காசிய கோத்திரத்தைச் சேர்ந்த
சிவஸ்ரீ அம்பிகாபதிக் குருக்கள் ஸ்ரீமதி வள்ளியம்மா தம்பதிகளின் புத்திரன்

**பிரம்மஸ்ரீ அ.செல்வராஜ சர்மாவிற்கு**

சமய, விஷேச, நிர்வாண தீட்சையும் ஆச்சாரிய அபிஷேகமு
எமது குலதெய்வமாகவும் எமது பராமரிப்பிலுமுள்ள திக்கம் துந்தா
சித்திவிநாயகப் பெருமானதும் திக்கவயல் காளிகாபரமேஸ்வரி
அம்பாளின் திருவருளினாலும்
**துந்தாவத்தை சித்திவிநாயகர்**
**(துளாய் பிள்ளையார்) ஆலய மண்டபத்தில்**
நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.
அந்தணப் பெருமக்கள், உறவினர், அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு
சிறப்பித்தும் வாழ்த்தியும் குருஆசி பெறுமாறும் வேண்டுகின்றோம்.

தீட்சா குரு :- வேதாகம சுரபி கலாநிதி **சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்** J.P.(புன்னாலைக்கட்டுவன்)
சாதகாசிரியர்:- **சிவஸ்ரீ சு.வைத்தீஸ்வரக்குருக்கள்** (வட்டுக்கோட்டை)
பெங்களூர் சபேச சிவாச்சாரியாரின் [இந்தியா]
அருள் ஆசியுடன் நடைபெறும்.

(61186)

அனைவரது நல்வரவையும் விரும்பும்:-
ஸ்ரீமதி வள்ளியம்மா அம்பிகாபதிக் குருக்கள்,
சிவஸ்ரீ அ.பிரபாகரக் குருக்கள் அம்பிகாதேவி தம்பதிகள்,
சிவஸ்ரீ ஜோ.குருசாமிக்குருக்கள் புவனேஸ்வரி அம்மா தம்பதிகள்.
(கைதடி, இணுங்கித் தோட்டம் கந்தசாமிகோயில் ஆலய பிரதமகுரு)

துளாய்ப்பிள்ளையார்
கோயிலடி, திக்கம்.

# நினைவலைகள்

**2 ஆம் ஆண்டு** | **10 ஆம் ஆண்டு**



மலர்வு 05-09-1919 உதிர்வு 02-06-2005
**அமரர் நாகரத்தினம் சின்னம்மா**
**(இளைப்பாறிய ஆசிரியை)**



மலர்வு 15-01-1917 உதிர்வு 26-09-1997
**அமரர் அரியகுட்டி நாகரத்தினம்**
**(குகன் ஸ்ருடியோ உரிமையாளர்)**

அன்புத் தெய்வங்களே! உங்கள் வழிகாட்டலிலே, உங்கள் நினைவுகளோடு
உங்களை வணங்கி வாழ்ந்துவரும் எங்களுக்குத் தொடர்ந்தும் உங்கள் நல்லாசி வேண்டி நிற்கின்றோம்.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஓராண்டு சங்கம நிகழ்வு

## செல்வி
## மாணிக்கம் லாவண்யா
## (யசோ)



இன்பத்தின் நிறைவாய் 02-01-1987
துயரத்தின் இமயமாய் 15-05-2006

இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு ஏனம்மா மறைந்தீர்கள்
நடமாடும் வீட்டில் படமாகிப்போன எம் யசோவே!
உமக்கு இன்று ஓராம் ஆண்டுத்திவசம் - உன்படத்துக்கோ
இன்று ஆத்மசாந்திப் பூசை
இதனைச் செய்யவா நாம் பிறந்தோம்
உம் சிரித்த முகம் காணாமல் பரிதவிக்கின்றோம்
மறுபிறப்பென்பது மானுட உண்மையென்றால்
மறுபடியும் பிறந்திடுங்கள் எங்களுடன் - இல்லையேல்
அழைத்திடுவாய் உன்னருகே.

உங்கள் ஆத்மாசாந்திபெற
கண்கள் [illegible]
கண்ணீர்ப்பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்
அப்பா, அம்மா, அக்கா, அண்ணா.

614/3, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(61171)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா இராமநாதபிள்ளை



(ஓய்வுபெற்ற ஆசிரியர், நோர்வூட் தமிழ் வித்தியாலயம், ஹற்றன்)

தையிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பெத்தரவளை, அளவெட்டி வடக்கை வதிவிடமாகவும், கேணிக்கரை வீதி, அளவெட்டி கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா இராமநாதபிள்ளை (29-05-2007) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிதம்பரத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஞானோதயா வித்தியாசாலை, சீனன்கலட்டி, அளவெட்டி) அன்புக்கணவரும் காலஞ்சென்றர்களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், செல்வரத்தினம், சமாதானதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இரத்தினம் மற்றும் நவரத்தினம், நாகம்மா காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, பர்வதம் மற்றும் முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரவீந்திரன், மகேந்திரன், மஞ்சரி, மாலினி, யசோதரர் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.05.2007) புதன்கிழமை அன்று நடை பெற்று மல்லாகம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணிக்கரை வீதி,
அளவெட்டிகிழக்கு, அளவெட்டி. (61173)

தகவல்:
**இ.சிதம்பரம்** (மனைவி).

## இராஜேந்திரம் அருள்பிரகாசம் (அருள் - பொன்ராஜ்)

(பெற்றோலியக் கூட்டுத்தாபன சாரதி)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான இராஜேந்திரம் அருட்பிரகாசம் 25-05-2007 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் - அருளம்மா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சிறியதாய் இலட்சுமி இராஜேந்திரத்தின் மகனும், காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளை- செல்லமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி சாந்தமணியின் அன்பு கணவரும், யோசவ் தங்கராஜா (திருமலை), காலஞ்சென்ற தங்கராணி, காலஞ்சென்ற இராசமலர் மற்றும் புனிதமலர், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் ஜெயராசா, பற்றிமாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும், அருள்ரூபன், மதனரூபன், காமலீற்றா (குயின்), கரோலின் (கனிஸ்ரா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அலக்ஷியா, டிலானி, றக்சன், சஞ்ஜீவ் ஆகியோரின் மாமனும், இயேசு காவலன், ஞானமணி, மனோவேதகாவலன், ஞானகாவலன், ஜெயமணி, காலஞ்சென்ற ஜோதிகாவலன், மனோரஞ்சிதமலர், பொன்ராசா, திருநாவுக்கரசு, மனோகரி, பற்றிமா, அன்ரன் ஆகியோரின் மைத்துனனும் கலா,தேவதாசன்,சுஜீவா, யோசப் ஆகியோரின் சகலனும், கிறிசாந், றயந்த், அரசிகா, ரிவேகா, கௌசிகா, சௌமியா ஆகியோரின் மாமனும், ஜெஸ்லின், யொய்சி, ஜெனிஸ், விஷிஷன், நிருஷன், நிலக்ஷன், ஜெதனிஸ் ஆகியோரின் பெரியப்பாவும், தர்னிஸ், ஜஸ்வின், அபிநாத், சாகநாத், அன்றியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கனடாவில் (02-06-2007) சனிக்கிழமை St.Bamabas Parish தேவாலயத்தில் 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக "Christ the King Chatholic Cemetery " க்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

12A , மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (61177)

தகவல்:
**பீற்றர் தேவதாசன்** (பாபு).

## ஆறுமுகம் கனகரத்தினம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகரத்தினம் (26.05.2007) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணி அம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், இராஜபட்சம் அவர்களின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மயில்வானம், சிவகுருநாதன் ஆகியோரின் மைத்துனரும் இங்கிலாந்தில் வசிக்கும் Dr.வசந்தமாளிகா, இராஜசூரியா (பொறியியலாளர்), உதயசங்கர் (பொறியியலாளர்) அவர்களின் அன்புத் தந்தையும் Dr. கருணாகரன், Dr. சாந்தினி, கார்த்திகா (கணக்கியலாளர்) அவர்களின் அன்பு மாமனும் Dr.வித்தியன், Dr. சிவமாலா வித்தியன், பாலமுருகன், காயத்திரி, பிரணவுன், சந்துரு, மிதுரா அவர்களின் அன்புப் பேரனும் யுவராஜின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 49, Marlborough Park Avenue, Sid Cup, Kent, DA 15 9DL, U.K. இலுள்ள அவரது இல்லத்தில் நாளை (03.06.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**Dr. வசந்தமாலிகா கருணாகரன்**
**T.P.: 0044- 208- 3095076**

(61182)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



03-05-2007 அன்று அமரத்துவம்
அடைந்த எங்கள்
குடும்பத்தின் தெய்வம்
**இராமநாதன் ருக்மணிதேவி**
**(பெரியம்மா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03-06-2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய, ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்திரகாளி ஒழுங்கை,
பருத்தித்துறை.
(61170)

**கிருஷ்ணராசா (கிட்டு),**
(உரிமையாளர்:**கிருஷ்ணா உணவகம்**)
**உறவினர்கள், அடியார்கள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கந்தையா தருமலிங்கம்



மலர்வு 03-06-1944
உதிர்வு 03-05-2007

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், இணுவையம்பதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் கடந்த 03-05-2007 அன்று சிவபத மெய்தினார். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (02.06.2007) சனிக்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு. (61172)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சமத்துவத் தகைமையை மறுத்து சமரசத்துக்கான பாதை மறிப்பு

ஜனாதிபதி மஹிந்தர் தலைமையிலான அரசின் போரியல் முனைப்புப் போக்குப் பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஊசலாடியபடி மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு - செத்துச் செயலிழந்து, உக்கி, உருக்குலைந்து வெற்றுத் தாளாகிப் போயுள்ள போர் நிறுத்த உடன்படிக்கைக்கு - நிரந்தரமாக இறுதிக் கிரியைகள் நடத்தி, அதை ஆழக்குழிதோண்டிப் புதைத்துவிட அரசு தயாராகிவிட்டது என்பதும் செய்தி. இவ்விடயம் தொடர்பான அரசின் உத்தியோகபூர்வ முடிவுவிரைவில்வெளியாகும்என்றும் கட்டியம்கூறப்பட்டுவிட்டது.

இதேசமயம் -

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிர்வாகம் மேற்கொண்ட 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற விபரீதக் கோட்பாட்டை தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பின்பற்றத் தயாராகி விட்டார் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

'இராணுவ நடவடிக்கைகள் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி பணியவைப்பது. பின்னர் தாம் விரும்பிய தீர்வுக்கு புலிகளை இணங்க வைப்பது.' - இதுதான் தென்னிலங்கையில் புதிது புதிதாக ஆட்சிக்கு வரும் அரசுத் தலைமைகளின் இறுமாப்புடன் கூடிய கனவாக இருந்து வந்திருப்பதை கடந்த மூன்று, நான்கு தசாப்தகால இலங்கை வரலாறு கண்டு வருகின்றது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவில் தொடங்கி, ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவரை எவரும் இத்தகைய கனவு காணும் விடயத்தில் விதிவிலக்கானவர்கள் அல்லர். ஆனால் அவர்களின் இந்தக் கனவு தொடர்ந்தும் பகல் கனவாக நீடித்து நனவாகாமல் - கானல் நீராக நம்பிக்கை தந்து காலை வாரி - போனதுதான் இன்றுவரையான யதார்த்தம்.

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் தானும் ஏறித் தடுமாறி விழுந்தாராம் சக்கடத்தார்' என்பதுபோல, புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி, அதன்பின்னர் தாம் விரும்பும் அரைகுறையான - உருப்படியற்ற - தீர்வுத்திட்டத்தைத் தமிழர்கள் மீது திணித்தல் என்ற மனக்குதிரையிலே தானும் பயணிக்கத் தயாராகி விட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

'இலங்கையில் சமாதானத்துக்கான விரோதிகள் பயங்கரவாதிகளான புலிகளே!' - என்று பக்கச் சார்பான பிரசாரத்தில் முழு அளவில் ஈடுபட்டிருக்கும் தென்னிலங்கை, அந்த சமாதான விரோதிகளை நசுக்கிவிட வேண்டும், அதற்கு யுத்தம் தவிர்க்கப்பட முடியாதது என்ற விபரீத விளக்கத்தை அளித்துக் கொண்டு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற கனவுக் குதிரையிலே தாவி ஏற முனைகின்றது.

'நிலையான சமாதானத்தை நிறுவி, தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதாக இருந்தால், அதற்கு முன்னர் ஒரு பாரிய யுத்தத்தின் மூலம் புலிகள் அமைப்பை பூண்டோடு அழிக்க வேண்டும். அதற்குப் போர் தவிர்க்கப்பட முடியாதது.' - என்ற பரப்புரையைத்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னர் இதே கருத்தியல் வித்தையைக் கையிலெடுத்த ஏனைய தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் முன்வைத்தார்கள்.

'சமாதானம் என்ற உன்னத இலட்சியத்தை அடைவதற்கு போர் என்ற அழிவு நடவடிக்கை அத்தியாவசியமானது' - என்ற இந்த விநோத - விபரீத - தனக்குள்ளேயே முரண்பாட்டு நிலைகளைக் கொண்டுள்ள - அரசியல் கோட்பாடு, சில சமயங்களில் சர்வதேச மட்டத்தில் சில காலத்துக்கு நன்றாக வேகலாம்; எடுபடலாம். அதுவும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச யுத்தம்' என்ற பெயரில் அமைதிக்கான போரியல் கோட்பாடு எனும் ஒவ்வாத கொள்கைப் போக்கை சர்வதேச வல்லாதிக்க நாடுகள், அமெரிக்கா தலைமையில் பூமிப்பந்து எங்கணும் கட்டவிழ்த்து விட்டுள்ள இன்றைய சூழ்நிலையின் பின்புலத்தில் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற மஹிந்தரின் பரப்புரையும் சர்வதேச மட்டத்தில் நன்கு அவியலாம்.

ஆனால் நீண்ட காலத்துக்கு அது பயன்தரத் தக்க வகையில் தாக்குப் பிடித்து - நின்று, நிலைத்து - ஓடாது என்பதே யதார்த்தம். 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச யுத்தம்' என்ற சகதியைத் தானே தோற்றுவித்து, அதற்குள் காலை விட்ட அமெரிக்கா, இப்போது நிற்கவும் முடியாமல், மீளவும் முடியாமல் அந்தரிப்பது போன்ற நிலையைத்தான் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற விபரீதக் கொள்கைப் போக்கும் உருவாக்கும் என்பது திண்ணம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் அரசும் இதேபோன்ற பட்டறிவைத்தான் இவ்வழியில் போய் படித்துக் கொண்டது என்பதும் அவரது அரசில் இடம்பெற்றிருந்த ஜனாதிபதி மஹிந்தருக்கும் அவரது அணியினருக்கும் தெரியாத விடயமுமல்ல.

அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் இப்போது வெளிப்படுத்தி வரும் அரசியல், இராணுவக் கருத்துகள் இரண்டு தரப்புகளுமே விரைவில் முழு அளவில் யுத்தத்துக்குள் மூழ்குவர் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவனவாகவே இருக்கின்றன. சமாதான நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகள் அருகி, முற்றாக அற்றுப்போய் விட்டன.

இதற்கு அடிப்படைக் காரணம் அமைதி முயற்சிகளை இந்த இரண்டு தரப்பும் அணுகும் முறையும் போக்கும்தான்.

இவ்விவகாரத்தில், இலங்கை அரசு தன்னை சட்டரீதியான, உயர் அதிகார பீடமாகக் கருதி அதில் இறுமாப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. புலிகளை அது சட்ட விரோதப் புரட்சிகர அமைப்பாக நோக்குகின்றது. சமத்துவ நோக்கில் புலிகளைப் பார்க்க அது அடியோடு மறுக்கின்றது. தன்னை உயர் நிலையில் நிறுத்தி, புலிகளைத் தாழ்த்தப்பட்ட தரப்பாகவே பார்க்கிறது.

ஆனால் புலிகளோ தன்மானமுடைய தமிழர் தேசத்தின் அதிகாரமிக்க பிரதிநிதிகளாகத் தங்களை வெளிப்படுத்தி, அந்த அந்தஸ்துடனும், சமத்துவத் தகைமையுடனும்தான் சமாதான நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடியும் என்ற பிடிவாதத்தில் நிற்கின்றார்கள். இரு தேசங்கள் மத்தியிலான யுத்தத்தில் சமவலுவுடைய - சமத்துவமான - போரிடும் தரப்பாகவும், ஒரு தேச விடுதலை இயக்கத்தின் தனித்துவமான தலைமைத்துவமாகவும் தம்மை உயர்நிலையில் நிறுத்தி, இலங்கை அரசுடன் சம பங்காளியாக - சம தரப்பாக - அமர்ந்துதான் அமைதி முயற்சிகளில் ஈடுபட முடியும் என்பதில் உறுதியாக நிற்கின்றார்கள் அவர்கள். இலங்கை அரசின் சமச்சீரற்ற அணுகுமுறைக்கும், ஆணவப் போக்குக்கும் அடிபணியும் விட்டுக் கொடுப்பில் புலிகள் இல்லை.

இப்படி ஒரு தரப்பை மற்றத் தரப்பு பகை முரண்பாட்டுடன் இனம் கண்டு, அதனையே நடைமுறையில் பின்பற்றுவதில் தீர்க்கமாக இருக்கும்போது, விரோதமும் குரோதமுமே நீடிக்கும். நல்லிணக்கத்துக்கும் சமரசத்துக்கும் வாய்ப்பே இருக்காது.

புலிகளைப் பலவீனப்படுத்தி, மண்டியிடச் செய்தபின்னர் சமரசத்துக்கு இணங்க வைக்கலாம் என்ற தென்னிலங்கைக் கனவு கூட இந்த அடிப்படையில் எழுந்திருப்பதுதான்.

அரசுக்கு நிதிப் பற்றாக்குறை:

# மாகாண சபைகளுக்கான ஒதுக்கீடுகளில் வெட்டு!

கொழும்பு, ஜூன் 2

அரசாங்கத்துக்குப் பெரும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக மாகாண சபைகளுக்கு மத்திய அரசு வழங்கிவரும் வருடாந்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளை குறைத்துவிடுவதற்கு அரசு முடிவு எடுத்துள்ளது.

இதன் காரணமாக கிராமப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் பல முடங்கிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சு அண்மையில் விடுத்த சுற்றுநிருப[illegible] அனுசரித்து மாகாணங்களின் பி[illegible]லாளர்கள் சம்பந்தப்பட்ட மா[illegible] அதிகாரிகளுக்கு இது பற்றி ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

அதன் பிரகாரம், புதிய வளர்ச்சித் திட்டங்கள் எதனையும் ஆரம்பிக்க வேண்டாம் என மாகாண அமைச்சர்கள் எழுத்து மூலமாகக் கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சில சபைகளின் உறுப்பினர்களுக்கு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளும் நிறுத்தப் பட்டுவிட்டதாகத் தெரி கின்றது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதற்கான வருடாந்த கொடுப்பனவுகளை அரசு இன்னமும் வழங்கவில்லை.

அரசாங்கத்துக்குப் பெரும் அளவில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ள அதேவேளை, பல மில்லியன் ரூபா கணக்கான நிதி ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக பொது கணக்குக் குழுவும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவும் தெரிவித்துள்ளன. (ப)

# முன்பள்ளிக் கற்கை நெறிக்கான இறுதிப் பரீட்சைக்கு 46 பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிப் பாடசாலை கற்கைப் நெறிக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தெரிவு செய்யப்பட்டுள்ள கீழ்காணும் மாணவர்களை நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு வருமாறு பிராந்திய நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

அவர்களின் விவரம் வருமாறு:

ஏ. ஆன்நிலோயினி - பண்டத்தரிப்பு, எஸ். ஐ. ஜீவசோதி - உடுவில், திருமதி எம். மகேஸ்வரி - மீசாலை, திருமதி பி. துஸ்காளந்தி - மல்லாகம், செல்வி பி. சங்கீதா - நல்லூர், செல்வி பி. சியாமினி - பண்டத்தரிப்பு, திருமதி எஸ். வள்ளியம்மை - சாவகச்சேரி, செல்வி எஸ். கார்த்தியாயினி - வண்ணார்பண்ணை, திருமதி ரி. சசிமாலா - கோண்டாவில், திருமதி பி. கிருஷ்ணவேணி - சுழிபுரம், ரி. வினோதன் - சுண்டிக்குளி, செல்வி எஸ். சிவகௌரி - வண்ணார்பண்ணை, திருமதி ஜெ. செந்தில்குமரன் - நயினாதீவு, செல்வி எஸ். சிவசிறீ - குப்பிளான், செல்வி ஆர். வினோசா - அரியாலை, செல்வி வி. பூரணி - சுழிபுரம், செல்வி எஸ். அனிதா - அரியாலை, செல்வி எம். ரட்ணேஸ்வரி - சாவகச்சேரி, செல்வி கே. செல்வராசா - பண்டத்தரிப்பு, திருமதி பி. தயாரூபினி - சுன்னாகம், செல்வி இ. சுசீலா - சித்தங்கேணி, செல்வி பி. பாலகௌரி - சுழிபுரம், செல்வி ஜீ. அபிராமி - மானிப்பாய், செல்வி வி. விஜயரூபி - சாவகச்சேரி, செல்வி பி. கலைமதி - கொடிகாமம், செல்வி ரி. தயன்தினி - இராமநாதன் வீதி, எஸ். பாலமுருகன் - கரணவாய், செல்வி எம். சாமிலா - சித்தங்கேணி, செல்வி எஸ். சண்முகலிங்கம் - நல்லூர், செல்வி பி. மகாலிங்கம் - நயினாதீவு, திருமதி வி. கௌசலா - கோண்டாவில், செல்வி கே. தவதேவி - சங்கானை, திருமதி என். ரவிதரா - அல்வாய், செல்வி என். நிரஞ்சனா - சங்கானை, திருமதி ஏ. கலைவாணி - நாவலர் வீதி, செல்வி எஸ். வசந்தா - நல்லூர், எம். ரவிபாலா - சுன்னாகம், செல்வி. கே. சசிகலா - சாவகச்சேரி, செல்வி எஸ். மனோகரன் - வண்ணார்பண்ணை, திருமதி யே. புவிராணி-சாவகச்சேரி, செல்வி பி. கிரிஜா - பண்டத்தரிப்பு, செல்வி கே. ஜெகசோதிராஜா - ஆனைக்கோட்டை, செல்வி வி. துரைராசா - பண்டத் தரிப்பு, செல்வி ரி. பாலதீபா - கொக்குவில், செல்வி ஆர்.- சத்தியகுமாரி - சித்தங்கேணி, செல்வி எஸ். கமலினி - சுழிபுரம்.

# மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளை அடுத்த மாதத்துக்குள் நடத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட் டுள்ளது.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்று விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்ட விளையாட்டு விழாவுக்கு முன்னோடியாக போட்டிகளை நடத்தி முடிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரிகளை யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளை பெரும்பாலும் இம்மாத இறுதிக்குள் நடத்தி முடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தெரிவு செய்யப்படும் வீரர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வார்கள். இதற்கான ஏற்பாடுகள் அரச அதிபரினால் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் வடமாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-50)

## பிரகடன.....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ள ஒரு நிறுவனத் தின் மூலம் கிடைக்கும் முழுமையான இலாபம் என்பனவாக இருக்கமுடியும்? இவை பற்றி பொது மக்களுக்கு விளக்கப்பட்டுள்ளதா?

ஈழப்போர் இன்னமும் பிரகடனப் படுத்தப்படாவிட்டாலும் அது உச்சமடைந்து வருவதுமட்டுமல்ல அபாயகரமான பரிமாணங்க[illegible]ளயும் பெற்று வருகின்றது.

இம்முறை அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் பாதுகாப்பு செயலாளரின் தலைமையிலான ஒரு பிரத்தியேக நிறுவனத்தினால் பல பில்லியன் கணக்கான பெறுமதி வாய்ந்த இராணுவத் தளபாடங்கள் கொள்முதல் செய்யப்படவிருக்கின்றன. இதனால் போரின் செலவீனம் உச்சமடைந்து வருகின்றது.

இந்த பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்தின் மீது சுமத் தப்படும் சுமையைத் தாங்கிக் கொண்டிருக் கிறவர்களான மக்கள் மீது மேன் மேலும் பழுவைச் சுமத்தி அதைத்தாங்கும்படி கேட்கப்படவுள்ளார்கள்.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 20 | ஞாயிற்றுக்கிழமை 03.06.2007 |
| திதி : துதியை | மு.ப. : 08.24 |
| நட்சத்திரம் : மூலம் | மு.ப.: 10.35 |
| சுபநேரம் | : 08.52 - 10.22 |
| ராகுகாலம் | : 04.22 - 05.52 |

## இன்று

யாழ். மத்திய ஸ்ரீ சத்ய சேவா நிலையத்தின் மாத[illegible]ந்தக் கல்வி வட்டம், நிலைய மண்டபத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற உள்ளது.

ஆன்மீக இணைப்பாளர் ஸ்ரீ மகேஸ்வரன் 'சரணாகதி' என்னும் பொருளில் சத்சங்கம் நடத்துவார். (அ)

* * *

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற ஆதரவுடன் பயிற்றுவிக்கப்பட்ட அழகுக்கலை பயிற்சி பெற்ற மாணவிகளினதும் தியாகி அறக்கொடை நிறுவன தையல் பயிற்சி மாணவிகளினதும் ஒருங்கிணைந்த தையல்கலைக் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசாமி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் கல்லூரி தின நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்திராக தேச நிர்மாண அமைச்சின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே.கே. பாலச்சந்திரன் கலந்துகொள்வார். (1-203-160)

* * *

வடமராட்சி வலயத்தில் ஆரம்பக் கல்வி பிரிவில் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் தி. சுபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர். (1-203)

* * *

நயினாதீவு பிடாரி அம்பாள் ஆலய உற்சவத்தை ஒட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ கணேசகனிஷ்ட வித்தியாலயத்தில் பொது அறிவுப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

தரம் ஒன்று தொடக்கம் 13 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர். (203)

## சமய சந்நிதிகளில்

வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை 25 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப பூசை நேரங்களில் மாற்றம் செய்யப்படும் என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார். (203-111-79)

* * *

சங்கானை அரசடி ஞானவைரவ ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் அன்னதானமும் இடம்பெறும். பிற்பகல் 3 மணியளவில் வசந்த மண்டபப் பூசையுடன் பூந்தண்டிகையில் பெருமான் வீதி உலா வருவார். (203-29)

* * *

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

மூத்த சமயச் சொற்பொழிவாளர் சபாரத்தின ஈஸ்வர சர்மா தினமும் மாலையில் பெரிய புராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார். (203)

* * *

வட்டுக்கோட்டை கிராவளை ஞான வைரவர் ஆலய சங்காபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (203)

# பொருள் விநியோகம் தொடர்பான சந்திப்பு

பொருள் விநியோகம் தொடர்பான பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோருடனான அவசர கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரசதிபர் கே. கணேஷ் தலைமையில் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அமைதியாகச் செவிமடுத்ததோடு காணாமல்போன உறவினர்களைக்கண்டுபிடிப்பதற்கான துரித நடவடிக்கை எடுப்பார் என்று அவர்களிடம் உறுதியளித்திருக்கின்றார். இது தொடர்பாக பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவிக் கையில் கூறியதாவது:-

''காணாமல் போனவர்களை மீட்டெடுக் கும் எமது நடவடிக்கைகளில் ஒன்றாக காணாமல் போனவர்களின் உறவினர்களை ஜனா திபதியிடம் அழைத்துச் சென்று அவர்களை ஜனாதிபதியிடம் நேரடியாக முறையிட வைத் தோம்.

''தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு அவர்கள் ஜனாதிபதியிடம் அழுது கேட்டனர். அவர்களின் முறைப்பாட்டை - வேண்டுகோளை ஜனாதிபதி அமைதியாகச் செவிமடுத்தார். காணாமற் போனவர்களை மீட்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள் வார் என ஜனாதிபதி அவர்களிடம் வாக்குறுதியளித் தார்.

''காணாமற்போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கும், தற்போது கொழும்பில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக் குத் தீர்வு காண்பதற்குமென அடுத்த வாரமளவில் 5 பேர் கொண்ட குழுவொன்றை அமைக்கவிருக்கிறார் என ஜனாதிபதி அச்சந்தர்ப் பத்தில் கூறினார்.

பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தமிழர்கள் இந்தக் குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும் என்றும் அந்தக் குழு சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

**விடுதிகளில் தங்கியிருப்போர் விவகாரம்**

அதேவேளை, விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழர்கள் வெளியேற்றப்பட வேண் டும் என்று பொலிஸாரால் உத்தரவு பிறப் பிக்கப்பட்டமை தொடர்பாகவும் நாம் அச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியிடம் மீண் டும் முறைப்பாடு செய்தோம்.

அவ்வாறு தமிழர்களை வெளியேற்றும் நிலைப்பாட்டில் அரசு இல்லை என்றும் அவ்வாறு வெளியேற்றப்பட வேண்டும் என்று யாரும் கூறவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

கொழும்பில் தமது அலுவல்களைக் கவனிப்பதற்காக வடக்கு - கிழக்கில் இருந்து வரும் தமிழர்கள் நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு தமது வேலை முடிந்தவுடன் உடனடியாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிப்போவது நல்லது என ஜனாதிபதி கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் காணாமல் போன வர்களின் உறவினர்கள் தமது முறைப்பாடு களைஎழுத்து மூலம் அங்கு சமூகம் கொடுத்திருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரி டம் ஒப்படைத்தனர். இவ்வாறு முறைப்பாடு செய்யுமாறு ஜனாதிபதியே அவர்களைப் பணித்தார் - எனக் கூறினார்.

இச்சந்திப்பில் 50க்கும் மேற்பட்ட காணா மல் போனவர்களின் உறவினர்கள், அமைச்சர் சந்திரசேகரன், பிரதியமைச்சர் இராதாகிருஷ் ணன், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் தி.மகேஸ்வரன், அமைச்சர்கள் ராஜித சேனாரத்தன, கெஹெலிய ரம்புக்வெல்ல, ஏ.எச்.எம். பௌஸி, மஹிந்தசமரசிங்க, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (சி)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றார் ஜனாதிபதி.

ஆனால் - அரசுப் படைகள் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தி, முழு அளவில் - சொல்லிலும் செயலிலும் - யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க முன்வ ராதவரை நோர்வே அனுசரணையுடனான அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க இடமேயில்லை எனத் தமிழீழ விடுத லைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச் செல்வன் கடந்தவாரம் அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே. (சி)

## இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிரல் சுரேஸ்மேத்தா இராணுவத்தளபதி ஜெனரல் ஜே.ஜே.சிங் மற்றும் மூத்த பாது காப்பு அதிகாரிகளுடன் கடந்த மூன்று தினங்களாகப் பேச்சு நடத்திய பின்னர் கடந்த புதன்கிழமை நாடு திரும்பினார்.

புதுடில்லியின் இந்திய உயர்தரப் போடு கோத்தபய ராஜபக்ஷ நடத்திய பேச்சுகளின் போது புலிகளால் தற்போது ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு புதிதாக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து விரி வாக உரையாடியுள்ளார்.

அப்போது அவற்றைச் சமாளிப்பதற் குத் தங்களுக்குத் தேவைப்படும் ஆயுத தளபாடங்களின் பட்டியல், இராணுவ உதவிகள் மற்றும் பாக்கு நீரிணையில் இந் தியா இலங்கை கடற்படைகளின் கூட்டு ரோந்து ஆகியவை குறித்த கோரிக்கைக ளையும் கோத்தபாய முன்வைத்தார்.

இந்த நிலையில் இந்திய விமானப் படை யின் ஏ.என். - 32 ரக விமானம் இரகசியப் பயணம் ஒன்றைக் கொழும்புக்கு மேற்கொண்டு சில இராணுவத் தளபாடங்களை வழங்கிவிட்டு திரும்பியிருக்கின்றது எனக் கூறப் படுகிறது.

இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு பரந்த அளவிலான இராணுவத் தளபாட உதவி களை வழங்கி வருகின்றது.

தாழப்பறக்கும் விமானங்களை கண்டு பிடிப்பதற்கு ஏற்கனவே இரண்டு ரடார் கருவி களை வழங்கியிருந்தது. தற்போது மேலும் புதிதாக இரு ரடார் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (சி)

## தென்பகுதியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு வரும் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேள்வி எழுப்பிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எத்தகைய பாரபட்சமும் இன்றி இந்த நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமையைப் பாதுகாப்பதற்கு அரசு தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது.

எத்தகைய இடைஞ்சல்களும் இல்லாமல் தமது அன்றாட வாழ்க்கையை கொழும்பில் இருக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களும், முஸ்லிம்களும் மேற்கொள்கின்றார்கள்.

ஆனால், தென்பகுதியில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலை இல்லையென்ற பொய்யான ஒரு கருத்தை சில குழுக்கள் உருவாக்க முயற்சிக்கின்றன.

இத்தகை பொய்வதந்திகள் அனைத்து இலங்கையர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன.

எனவே, இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளாமல் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

இந்தச் சந்திப்பின் போது பொருளா தார மேம்பாடு மற்றும் அரசியல் ஒத்து ழைப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (சி)

## விடுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன கூறுகையில், தமிழர்களும் இந்நாட்டு பிரஜைகள் தான். இந்த நாட்டில் எந்தப் பகுதிக்கும் சென்று வாழும் உரிமை அவர்களுக் குண்டு.

கொழும்புக்கு வெளியேயுள்ள தமிழர்கள் கொழும் பில் தங்கள் அலுவல்களை முடித்துக் கொள்வதற்காக 'லொட்ஜ்'களில் வந்து தங்கு கின் றனர்.

அவர்களை அவ்வாறு தங்க வேண்டாம் என்று சொல்லுகின்ற உரிமை பொலிஸாருக்கோ அல்லது அரசியல் வாதிகளுக்கோ கிடையாது. இது பாரிய மனித உரிமை மீறலாகும்.

லொட்ஜ்களில் தங்கியுள்ள தமிழர்கள் மாத்திரமன்றி கொழும்பு வாழ் தமிழர்களும் பல அசௌகரியகங்களுக்கு உள்ளாகின்றனர் என்று நாம் அறிகின்றோம். இது தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளது.

'லொட்ஜ்'களில் தங்கியுள்ள தமிழர்கள் மாத்திர மின்றி கொழும்பு வாழ் தமிழர்களும் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கினால் அது தொடர்பாக எமக்கு உடனடியாக அறியத்தரவும்.

அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற் கான நடவடிக்கையில் நாம் உடனடி யாக இறங்குவோம். மனித உரிமைகளைப் பாதுகாக் கும் அமைப்புகளிடமும் முறைப் பாடு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள் வோம் - என்றார். (சி)

## ஓமந்தை ஊடான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை நியைம் ஊடான போக்கு வரத்தை எந்த வகையில் முன்னேற்றலாம் என்பது தொடர்பாகவும், இப்போது வாரத் தில் மூன்று நாள்கள் மட்டும் இடம் பெறும் போக்குவரத்தை மேலும்சில நாள்கள் அதிகரிப் பது தொடர்பாகவும் நேற்றைய பேச்சில் ஆராயப்பட்டது.

அரசாங்கத் தரப்புடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னரே இது குறித்து முடிவெக்க இயலும் என அறியப்படுகின் றது. (அ-1)

## யுத்த நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தத்தில் மாற்றம் எதனையாவது கொண்டுவருவதா அல்லது ஒப்பந் தத்தை ரத்துச் செய்வதா என்பது குறித்து அரசு தமக்கு எந்தவித அறிவுறுத்தல்களை யும் இதுவரை விடுக்கவில்லை என்றும்-

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு அமைய போர் நிறுத்த ஒப்பந்தம் தம்மால் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது என்றும் அது தெரிவித் துள்ளது. (சி)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, புறக்கோட்டைப் பிரதேச 'லொட்ஜ்'களில் தங்கியிருக்கும் வடக்கு - கிழக்குத் தமிழர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேற்றும்படி, சுமார் அறுபது 'லொட்ஜ்'களின் உரிமையாளர்களை அழைத்து பொலிஸார் வியாழக்கிழமை பிற்பகல் திடீர் உத்தரவு விடுத்தனர் என்றும் -

எனினும் இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பிய பின்னணியில் அவ்வாறு தாங்கள் பணிப்பு விடுக்கவில்லை என்று பொலிஸார் 'சமாளிப்பு' விளக்கமளித்தனர் என்பதும் -

செய்திகள் வெளியான பின்னணியிலேயே, கொழும்புக்கு வரும் சிறுபான்மைத் தமிழர்களினால் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற புதிய கண்டுபிடிப்பை விடுத்திருக்கின்றார் பொலிஸ்மா அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாயகி லோகேஸ்வரன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாயகி லோகேஸ்வரன் 27.05.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- சோதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் கா.லோகேஸ்வரனின் (இளைப்பாறிய உத்தியோகத்தர்- இ.போ.ச.) அன்பு மனைவியும் சேரன், சேகரன் (பொறியியலாளர்-அமெரிக்கா), மயூரன் (லண்டன்), மயூரதி (ஆசிரியை - யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவப்பிரியாவின் மாமியும் கீர்த்தன், கவிதா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கனகரத்தினம், செல்வரத்தினம், பேரம்பலம், சோமசுந்தரம் மற்றும் இராசநாயகி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் சௌவுந்தரராசா, லோகேந்திரன், துரைசிங்கம், செல்லத்துரை, கனகரத்தினம், தவஞானம், சோதிராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.06.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

586,நாவலர் வீதி,
அரியாலை,
தொ.பே:021 222 7977

தகவல்:
கா.லோகேஸ்வரன்.
(கணவர்)

61166

### திருமதி தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்

(பிள்ளையம்மா)



கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம் (பிள்ளையம்மா) நேற்று (01.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோண்டாவிலைச் சேர்ந்த திரு.திருமதி. கந்தையாவின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் (குழந்தைவேலு) அன்புச் சகோதரியும் அருந்ததியின் அன்புத் தாயும் புவனேந்திரனின் (இளைப்பாறிய சிறாப்பர்- புகையிரதத் திணைக்களம்) மாமியும் நிசாந்தன் (பொறியியலாளர்,சிங்கப்பூர்), நிதர்சன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), ஷர்மிளா, பிறேமிளா, வர்மிளா (மாணவிகள்-மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி லிசாயினி நிதர்சன் (மாணவி, மிருக வைத்தியபீடம் பேராதனை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'வள்ளிவாசா'
வராம்பற்றை, கோப்பாய் வடக்கு.

தகவல்:
அருந்ததி (மகள்).

61256


**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

இன்று ஆரம்பமாகின்றன

**அஞ்சல் அலுவலர் தெரிவு**

(09.06.2007 இப்பரீட்சை நடைபெறவுள்ளது)

சனி, ஞாயிறு 1-4 ஏனைய நேரம் வகுப்பில்

**பட்டதாரி ஆசிரியர் தெரிவு**

சனி, ஞாயிறு 11 - 1

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு

(யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)

**இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு**

சுத்திகரிக்கப்பட்ட புரொயிலர் கோழி இறைச்சி மொத்தமாகவும் சில்லறை யாவும் பெற்றுக் கொள்ளலாம்

வரணி பிசன் விற்பனை நிலையம்
145,நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**பொருளியல் கருத்தரங்கு**

DMI - Jaffna | BRIGHTEN - சாவகச்சேரி
ACA - இணுவில் | SUBRA - சித்தங்கேணி

ஆசிரியர்: S.S.சிறி

8 வெளியீடுகள் வினாவிடைகளுடன் வழங்கப்படுகின்றன. பதிவினை மேற்கொண்டு பெறவும்.

PART - I . (5 முதல் 23 வரை)
PART - II (25 முதல் ஜூலை 8 வரை)

வெளிமாணவர்கள் விரும்பிய நிறுவனங்களில் கருத்தரங்கில் பங்குகொள்ளலாம்.

**2008 A/L**

பொருளியல்

V.V.K.கரன் (B.Sc)

பணம், வங்கி, பொது விலைமட்டம்

ஆரம்பம்: 02.06.2007

பேனிசுலா அக்கடமி
புங்கன்குளம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**அருட்திரு க. ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார்**



நூற்றாண்டு விழாக் காணும் எமது கல்லூரியின் அதிபர் அருட்திரு க.ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளார் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி (M.Ed) பட்டம் பெறுவதையிட்டு பெருமையும் பெருமகிழ்வும் அடைவதுடன் வாழ்த்துக்கள் பலவும் கூறுகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



விஜய், அசின், வடிவேல் நடித்த

(றீல்ஸ்)

**போக்கிரி**

தினசரி : 11மணி, 3மணி.

**விற்பனைக்கு**

S.L.T. கேபிள் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 734339

தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.

**விற்பனைக்கு**

நெல்லியடியில் இயங்கி வரும் தனியார் வாணிபம் (அழகுசாதனம், அலங்கார, வீட்டு உபகரணப் பொருள்கள்) முற்றுமுழுதாக விற்றுத் தீர்த்தல். மொத்தமாகப் பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். அத்துடன் கடைக்குரிய அலுமினிய ஷோக்கேஸ்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: த.அருள்

தொ.பே:


## மரண அறிவித்தல்

### திருமதி சிவகடாட்சம் கதிரமலை

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகடாட்சம் கதிரமலை நேற்று (01.06.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகடாட்சத்தின் (சின்னத்தம்பி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லர்-கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயரட்ணம் (முன்னாள் ஊழியர்- மின்சாரசபை, யாழ்.மாநகரசபை), ஜெயக்குமார் (கட்டட ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் தாயும் சிவயோகம், லோகேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஜெகதீபன் (டோகா), மிஷாந்தன் (காசாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்- கிளிநொச்சி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சிவநாமத்தின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2007) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாஸ்திரியார் லேன்,
அரியாலை.

தகவல்:
ஜெயக்குமார்
(மகன்-ஜெயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.